# வெயிலின் தாக்கத்தை தடுக்க உதவும் வெப்ப தட்டோடுகள்



Er. D.ரவி B.E.,

நாம் ஒரு பசுமையான கிராமத்திற்கு செல்லும் பொழுது, கோடை கால மதிய பொழுதுகள் சூட வெப்பமயமாக தெரியாது. வெப்பமே இருந்தாலும் சென்னை போன்ற பெரு நகரங்களில் தெரியும் உக்கிரமோ அல்லது உறுத் தலோ தெரியாது. பெரு நகரங்களில் பொதுவாக கோடை கால மத்தியான பொழுதுகளில் ஒரு மாதிரியான நசநசப்பு தெரியும். ஆனால் பசுமையான கிராமங்களில் அது தெரியாது.

இம்மாதிரியான வெப்பமய மான நகரங்களை "நகர வெப் பத்தீவுகள்" (ஹீட் ஹேரவர்ட்) என்று குறிப்பிடுகின்றனர்.

"ஒரு பெருநகர பகுதி, அதனை சார்ந்த புற நகர் மற்றும் கிராமப்புற பிகுதிகளைக் காட்டிலும் கோடையிலோ அல்லது குளிர்காலத்திலோ அதிக வெப்பமாக இருப்பதே நகர வெப்பத்தீவுகள் எனப்படும்"

## நகர வெப்பத்தீவுகளின் உருவாக்கம்

இம்மாதிரியான வெப்பத்தீவு கள் எப்படி உருவாகின்றன என்று பார்ப்போம்:

நகரமயமாக்கல் நடக்க ஆரம்பித்த பிறகு, ஒவ்வொரு நகரத்திலும் கான்கிரீட் கட்டிடங் கள் அதுவும் மிகவும் உயரமான அடுக்குமாடி கட்டிடங்கள் கட் டப்படுகின்றன. அம்மாதிரியான கட்டிடங்ளை சுற்றி கற்காரை தளங்களும் உருவாக்கப்படு கின்றது. நகரினை சுற்றி தார் சாலைகளும் அமைக்கப்படு கின்றன. இவை எல்லாம் இயற்கையான புல்வெளிகளை யும், மரங்களையும் அழித்து விட்டு உருவாக்கப்படுகின்றன.

ஒவ்வொரு பொருட்களும் வெவ்வேறு விதமான வெப்பத் தினை உள்வாங்கும். சூரிய வெப்பமானது கட்டிடங்களின் மேற்கூரைகளிலும் மற்றும் தார் சாலைகளிலும் உள்வாங்கப் படுகின்றது. இதன் காரணமாக 2 முதல் 5 டிகிரி சென்டிகிரேட் வரை இயற்கையான வெப்பத்திலிருந்து அதிகரிக்கின்றது.

இது ஒவ்வொரு வருடமும் அதிகரித்து கொண்டே போகின்றது.

## நகர வெப்பத்தீவுகளின் தீமைகள்

ஒவ்வொரு நகர வெப்பத்தீவும் மிக பெரிய அளவில் சுற்றுச்சூழல் பாதிப்பினை ஏற்படுத்துவதுடன், புவி வெப்பமயமாதலுக்கு காரணமாக அமைகின்றது.

நகர வெப்பத்தீவுகளின் தாக் கத்தை தடுப்பது எப்படி?

நகர வெப்பத்தீவுகள் உருவா காமல் தடுக்க முடியாது. ஏனெனில் நகர மயமாக்கல் என்பது இன்று தவிர்க்க முடியாத விஷயமாகும். ஆனால் நாம் முயற்சி செய்தால் நகர வெப்பத் தீவுகளின் தாக்கத்தை குறைக்க முடியும்.

கிராமத்தில் எல்லோரும் பொங்கலுக்கு வீட்டை சுத்தப் படுத்தி புதியதாக வெள்ளை (சுண்ணாம்பு) அடிப்பார்கள். குளிர்காலம் முடிந்து வெயில் காலம் வருவதை முன்னிட்டு நமது முன்னோர்கள் ஏற்படுத் திக்கிட்ட பாதுகாப்புதான் அது. மிக அதிகமான வெப்பத்திருப்பு திறன் வெள்ளை நிறத்திற்கே உண்டு. அதன் அடிப்படை யிலேயே தற்போது வெப்ப தடுப்பு பூச்சுகள் அடிக்கப்படு கின்றது.

இதன் அடிப்படை தத்துவம் என்னவென்றால் வெப்பத்தினை உள்வாங்காமல் இருப்பது. பொதுவாக இம்மாதிரியான வெப்ப தடுப்பு பூச்சுகளை விற்பனைசெய்துவரும் அனைத்து நிறுவனங்களும் பகல் 12 மணிக்கு வெறும் காலில் காலணிகள் அணியாமல் வெப்ப தடுப்பு பூச்சு அடிக்கப்பட்ட தரையில் நடக்கலாம் என்று சொல்வது Non Conductivity of heat ன் அடிப்படையில்தான்.

மிக மெல்லியதாக தெரியும் நுண்துளைகள்தான் வெப்பக் கடத்தலை தடுப்பதுடன் வெப் பத்திருப்புதலையும் செய்கின் றது.

இப்பொழுது வீட்டுக்குள் இறங்கும் வெப்பத்தினை தடுக்க வெப்பத்தட்டோடுகள் வந்து விட்டன. அவைகளை பதிக்கும் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய முறைகளும் கீழே கொடுக்கபட்டு உள்ளது.

முதலில் "டெக்ஜில் டைல்ஸ்" ஒட்டப்பட வேண்டிய தளத்தை சுத்தம் செய்துகொள்ள வேண்டும். டைல்ஸ் ஒட்டும் கலவையை தேவையான அளவு வாட்டம் வைத்து மட்டப்பலகை கொண்டு சமப்படுத்திக் கொள்ளவும்.

ARTICLE PUBLISHED IN DAILY THANTHI
DATED 21/04/2014